யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 22 புதன்கிழமை (8-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 297


# கனகராயன்குளத்தை அண்டிய மூன்று முனைகளில் கடுஞ் சண்டை

## புலிகள் அறிவிப்பு

வவுனியா, ஒக்ரோபர் 8

"வெற்றி உறுதி" படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய நகர்வுகளை மேற்கொள்ள முயன்றதை அடுத்து பல பகுதிகளில் புலிகள் அவர்களை வழி மறித்துத் தாக்கி வருவதாகப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

கனகராயன் குளத்தை அண்டி மூன்று முனைகளில் தொடர்ந்து கடுஞ் சமர் நடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கரிப்பட்டமுறிப்பு சந்தியை நோக்கியும் —

படையினரின் விநியோக மையமான கனகராயன் குளத்தில் இருந்து வட — கிழக்கே மூன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் விஞ்ஞான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தம் தரப்பில் 71 பேர் பலி என்கின்றனர் புலிகள்

வவுனியா, ஒக். 8

கனகராயன் குளத்துக்குச் சமீபமாக கடந்தமூன்று நாள்கள் இடம்பெற்ற மோதல்களில் தமது தரப்பில் 71பேர் களப்பலியானதாகப் "புலிகளின் குரல்" நேற்றிரவு அறிவித்தது.

முதல் நாள் சண்டையில் 31 பேரும் —

பின்னர் 40 பேரும் —களப் பலியானதாகத் தெரிவித்த 'புலிகளின் குரல்', அவர்களின் பெயர் விபரங்களையும் அறிவித்தது.

படையினர் தரப்பில் 100 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாகவும் "புலிகளின் குரல்" தெரிவித்தது.

(உ-164-3)

## 3 ஹெலிகள் மீது புலிகள் ஏவுகணைத் தாக்குதல்

கொழும்பு, ஒக். 8

திருகோணமலையில் இருந்து ஆனையிறவுக்கு நேற்றுக்காலை 8,35 மணியளவில் துருப்பினரை ஏற்றிச் சென்ற எம். ஐ. 17 ரக ஹெலிக் கொப்டர்கள் மூன்று நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளானதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னணியில் சென்ற ஹெலிக்கொப்டர் ஓட்டி மாலெட்ரோனிக் இயந்திர சாதனத்தின் உதவியுடன் தூரத்தில் இரண்டு புலிகளின் படகுகள் வருவதை அவதா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் படை குவிப்பு

வவுனியா, ஒக். 8

வன்னிப் போர் முனைக்கு நகர்த்துவதற்காக 30 கவச வாகனங்கள் மற்றும் ஆயுத தளபாடங்கள் வவுனியா ஈரப் பெரியகுளம் முகாமுக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டதாக வவுனியா தகவல்கள் தெரிவித்தன.

ஏராளமான படையினரும் வாகனங்களில் அங்கு கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-164-3)

## இன்ஸ்பெக்டர் கைது

கொழும்பு, ஒக். 8

சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரபல பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்ஸா படு கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திலக சுரேந்திரா என்பவரும் பொலிஸ் சார்ஜன்ட் சரத்சந்திர எனபவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர், அவர்களை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை கொழும்பு நீதிவான் பிறப்பித்திருக்கின்றார்.

## அறந்தலாவையில் 12 புலிகள் பலி!

வவுனியா, ஒக். 8

அம்பாறை மாவட்டம் அறந்தலாவ பொலீஸ் நிலையம் மீது திங்கள் அதிகாலை மேற்கொண்ட தாக்குதலில் 12 பேர் தமது தரப்பில் களப் பலியானதாகப் "புலிகளின் குரல்" தெரிவித்தது.

45 நிமிட நேரம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் பொலீஸ் நிலையம் தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவரப் பட்டதாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 27 ராணுவ சடலங்கள் புலிகள் ஒப்படைப்பு

வவுனியா, ஒக். 8

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இடம்பெற்று வரும் சண்டைகளில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 27 படையினரின் சடலங்கள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவிடம் மல்லாவியில் வைத்து ஒப்படைக்கப்பட்டதாக "புலிகளின் குரல்" தெரிவித்தது.

ஞாயிறு சண்டையில் 19 சடலங்களும்—

திங்கள் சண்டையில் 7 சடலங்களும்—

நேற்றையசண்டையில் ஒரு சடலமும்—

கைப்பற்றப்பட்டிருந்தன என்றும்—

அவை மல்லாவியில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதி ஜோன் போல் ஜக்பொட்டிடம் கையளிக்கப்பட்டன என்றும்—

"புலிகளின் குரல்" தெரிவித்தது.

(உ-164-3)

## புலிகளின் முக்கிய முகாம் படை கைப்பற்றியதாம்

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இதுவரை காலமும் புகலிடம் அளித்து வந்த — புலிகளின் முக்கிய முகாமான — 'வன் போ' (14) முகாம் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கவை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

"புலிகளுக்கு எதிரான கடைசி நடவடிக்கையாக 'வெற்றி உறுதி' நடவடிக்கை இருக்கும்.

"காடுகளுக்குள் ஒடித்தப்ப நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள புலிகளால் படையினரை இனி எதிர்கொள்ள முடியாது.

"கிழக்கிலும் புலிகளின் மறைவிடங்களை படையினர் விரைவில் கைப்பற்றிவிடுவர்.

"கடந்த இரண்டு நாள் சண்டையில் 300 புலிகள் வரை உயிரிழந்துள்ளனர். 4 அதிகாரிகள் உட்பட 30 படையினர் உயிரிழந்துள்ளனர்; 42 படையினர் காயமுற்றுள்ளனர்.

— இவ்வாறு அவர்மேலும் தெரிவித்தார்,

(உ-3-5-21-164)

## மனித உரிமைகள் குழுவின் அலுவலகம் யாழ். நகரில்!

யாழ்ப்பாணம், ஒக். 8

ஜனாதிபதியால் அண்மையில் நியமிக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு, தனது பிராந்திய அலுவலகம் ஒன்றை அடுத்த ஒரு மாத காலத்துக்குள் யாழ்ப் பாணத்தில் திறக்கும்.

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினரான கலாநிதி ஏ. ரி. ஆரியரத்தின இத்தகவலை உதயனுக்கு வெளியிட்டார்.

ஆணைக்குழு அமைக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் இறுதி அறிக்கை

# லலித், கொப்பேகடுவ கொலைகளுடன் பிரேமதாஸாவுக்கு நேரடித் தொடர்பு!

கொழும்பு, ஒக், 8

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, லலித் அத்துலத் முதலி ஆகியோரின் படுகொலைகள் குறித்து விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் தமது இறுதி அறிக்கைகளை நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதியிடம் கையளித்தன.

இவ்விரு படுகொலைகளுடனும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா நேரடியாகத் தொடர்புபட்டிருந்தார் என்று அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பாதாள உலக துப்பாக்கி நபர்களையும், கொலைகாரர்களையும் பயன்படுத்தி திட்டமிட்ட முறையில் இப்படுகொலைகள் நடத்தப்பட்டுள்ளன என்று இந்த அறிக்கைகள் கூறுகின்றன.

சொத்தி உபாலியே லலித் அத்துலத் முதலியின் உண்மையான கொலையாளி என்றும் —

கொலைக்கான குற்றம் விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டது என்றும் —

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிசேன கூரே உட்பட சிலரின் சிவில் உரிமைகளைப் பறிக்கவேண்டும் என்று ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

[உ—3]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## MEDIQUICK ஆய்வு கூடம்

மெடிக்குயிக் ஆய்வு கூட உரிமையாளர் திரு. அ. சுந்தரலிங்கம் நவீன மருத்துவ உபகரணங்களுடன் யாழ்ப்பாணம் வந்துள்ளார் என்பதனை வைத்தியர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறேன்.

அ. சுந்தரலிங்கம்
Medical Techinologist

518, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.

(50372)



உ

## யாழ். இந்து மகளிர் கல்லூரி
## பரிசளிப்பு விழா - 1997

காலம்: 09-10-97 வியாழக்கிழமை மு. ப. 9.30 மணி

முதன்மை விருந்தினர்

**கலாநிதி கார்த்திகேசு குகபாலன்**

(புவியியற்றுறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்கல்

**திருமதி கோகிலாதேவி குகபாலன்**

பெற்றோர், பழைய மாணவியர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

(50376)



## போரூட்

ஆதரவுடன் இயங்கும்

**வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகு**

தம்பசிட்டி, பருத்தித்துறை.

புதிய
B. A. II — 11-10-97
B. Com III — 01-11-97 } — ஆரம்பம்

புதிய G. A. Q. First in Com. வகுப்புக்கள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன.

- நிர்வாகம்.

(சி/1719)



## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய வைபவமும்



**அமரர் பண்டாரம் விநாயகமூர்த்தி**

தோற்றம்: 12 - 07 1924
மறைவு: 24 - 09 - 1997

திதி: 09 - 10 - 97

அன்னாரின் 16 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியையும், வீட்டுக் கிருத்திய வைபவமும் நாளை 09-10-97 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(50377)


## மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

மீளக்குடியேறி ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இருந்து நடமாடி வந்த வளவில், ஆட்டுக்குக் குழை வெட்டச் சென்ற வேளை வேலியோரமாகக் கிடந்த மிதிவெடியில் சிக்குண்டு ஒருவர் வலதுகாலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

புத்தூர் வடக்கில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராமநாதன் சந்திரசேகரம் (வயது 38) என்பவரே படுகாயமடைந்தவர். அவர் யாழ். ஆஸ்பத்திரி ில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## மன்னாருக்கு நாளைசேவை

யாழ்ப்பாணம், ஒக். 8

காங்கேசன் துறையிலிருந்து மன்னாருக்கான பயணிகள் கப்பல் சேவை நாளை நடைபெற உள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களை நாளை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப் பட்டுள்ளது.

606 ஆவது இலக்கப்பட்டியல் வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

## சிரமதானம்

உலக சேவைத் தினத்தை முன்னிட்டு யாழ். லயன்ஸ் கழகம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இன்று சிரமதான பணியை மேற்கொள்ளவுள்ளது. (உ-135)

## பரிசளிப்பு விழா

யாழ். இந்து மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை முற்பகல் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக யாழ். பல்கலைக் கழக புவியியல் துறை தலைவர் கலாநிதி கா. குகபாலன் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி கோகிலாதேவி குகபாலன் வழங்குவார். (உ-135)

## வாணி விழா

யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகஸ்தர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் நவராத்திரி விழா இன்று நண்பகல் 12 மணிக்கு உள்ளூராட்சி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும். (உ-30)

★ ★ ★

கொடிகாமம் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்படும் மந்துவில் கிழக்கு பாலர் பாடசாலையில் வாணி விழா இன்று பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் இ. மகாலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

விழா இறுதியில் பாடசாலை சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.


## யூனிவேர்சல்

கந்தர்மடம்

**A/L 99**

**கணக்கியல்**

ஆசிரியர்:
திரு. சி. தவராசா (தவா)

**கணக்கீட்டுச் சமன்பாடு**

ஆரம்பம்: 08-10-97
புதன், வெள்ளி
4-30 p. m

**தொங்கல் கணக்கு**

சனி, ஞாயிறு
6-30 a. m.

(50382)



## சென். பற்றிக்ஸ் கல்லூரி

நாளை (09—10—1997) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள கல்லூரியின் பரிசளிப்பு தின விழாவில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். தயவு செய்து சமுகம் தரவும்.

பி. பெனடிக்ற்
செயலாளர்

பழையமாணவர் சங்கம்,
சென். பற்றிக்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(50383)



## ஈசன் கல்வி நிலையம்

கோண்டாவில்.

**A/L 98 DAY CLASS**

**கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பமாகின்றது.**

**பொருளியல்: திரு. இராஜேஸ்வரன்**
ஆரம்பம்: 08—10—97 2-00 மணி

**கணக்கியல்: திரு. பாலவாசன்**
ஆரம்பம்: 08—10—97 3-00 மணி

**வர்த்தகம்: திரு. பசில்**
ஆரம்பம்: 09—10—97 10-00 மணி

**வணிகபுள்ளிவிவரவியல்: தவசேகர்**
ஆரம்பம்: 09—10—97 11-00 மணி

**அளவையியல்: திரு. R. P. சர்மா**
ஆரம்பம்: 09—10—97 7-30 மணி

**தமிழ்: திரு. லிங்கம்**

★ மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(50381) - நிர்வாகி



## விண்ணகப் பிறப்பின் 41 ஆவது நாள் நினைவஞ்சலி



**ஆபிரகாம்பிள்ளை அருளப்பு**

(உரிமையாளர் ''சுடரொளி'' சுன்னாகம்)

மண்ணில்: 15 - 12 - 1924
விண்ணில்: 30 - 08 - 1997

ஆல விருட்சமாய் நீ இருக்க அந்நிழலில் நாம் ஆறி நின்றோம்
விடி விளக்காய் நீ நின்றெரிய அவ்வொளியில் நாமிருந்தோம்
குளிர்ப்புனலாய் நீ இருக்க அவ்வூற்றில் பருகி நின்றோம்.

அந்தோ
இன்று நாம் கரைசேராக் கப்பலானோம்
கயிறறுந்த பட்டமானோம்
நீ
முடிவில்லா வாழ்வை நோக்கிவிட்ட பயணத்தில்
முடிவிலான் முகம் கண்டு மகிழ்ந்திருக்க வேண்டுகின்றோம்.

நாளை (09-10-97) வியாழன் மு.ப. 11.00 மணிக்கு இல்லத்தில் நடைபெறும் ஆன்ம சாந்தி வழிபாட்டிலும் அஞ்சலி நிகழ்வுகளிலும் பங்கு கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் வருந்தும்:
மக்கள், மருகர், பேரர், உறவினர்.

''ஜெய மஹால்''
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

(50379)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச மீட்டல் வகுப்பு

வட்டுக்கோட்டை, ஒக். 8 டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ சாதாரண பரீட்சையில் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் இளைஞர் முன்னேற்றக்கழக மண்டபத்தில் இலவச மீட்டல் வகுப்புகள் இன்று முதல் நடைபெறுகின்றன. (இ-12)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



மண்ணில் மலர்ந்தது 24 — 08 — 1944

விண்ணில் விரைந்தது 08 — 09 — 1997

### அமரர் சபாபதிப்பிள்ளை குகதாசன்

(ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், இ. போ. ச., பருத்தித்துறை)

மண்ணுலகை நீத்த எம் மாண்புமிகு தந்தையரே!
கண்ணின் மணிபோல காத்து வந்த அப்பாவே
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித்
தவிக்கின்றோம்

பாசமும் நேசமும் பற்றும் மிக வைத்தீர்கள்
ஆசையுடன் வளர்த்து அன்பு மழை பொழிந்தீர்கள்
விதியின் விளையாட்டால் இப்போது வீதியிலே
நிற்கின்றோம்

கொழு கொம்பு இல்லாத கொடி போலத்
தவிக்கின்றோம்

தங்கள் திருமுகத்தின் தரிசனத்திற்கு ஏங்கித்
தவிக்கின்றோம்

எங்கள் கனவிலே வந்து காட்சி தாருங்கள் அப்பா!
தங்கள் ஆத்மா சாந்தி பெற ஆறுமுகனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று 08 - 10 - 1997 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் பிரிவுத்துயரால் வாடும்

மனைவி: திருப்பதி
பிள்ளைகள்: நளாயினி,
தமயந்தி, அனுசியா.

பத்தமேனி,
அச்சுவேலி.

(50266)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம்: 13 — 04 — 1908

விண்ணகம்; 19 — 09 — 1996

### இராமலிங்கம் இரங்கநாதன்

(பிரதம இறைவரி பரிசோதகர், யாழ். மாநகரசபை)

திதி:- சப்தமி 08 - 10 - 97

அன்பின் திருவுருவாய் கண்ணனை வினாடிக்கு வினாடி இதயத்தில் வைத்து வழிபட்டு அவனின் கீதையை மனதில் நிறுத்தி அதன்படி வழி நடந்து பாசத்தின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய் எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய எம் அறிவுத் தெய்வமே! எம்மை விட்டு நீங்கள் சென்று ஆண்டொன்று ஆனாலும், உங்கள் நினைவுகள் எங்கள் உயிர் உள்ளவரை தொடர்ந்தேயிருக்கும்.

உங்கள் நினைவால் துயருறும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''செந்தாமரை''
67, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

## அறவழி போராட்டக்குழு கடன் உதவி

நெல்லியடி ஒக் 8

வடமராட்சி பிரதேச அறவழி போராட்டக்குழு செயலகத்தில் அறவழித் திட்டத்திலிருந்து தெரிவானவர்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டது.

இந்த வைபவம் கடந்த சனிக்கிழமை காலை, நெல்லியடியிலுள்ள அறவழி செயலகத்தில் தலைவர் வி. ஜீ தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

சுய தொழில் கடன் திட்டம் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம், முன்பள்ளி ஆசிரியர் கடன் திட்டம் போன்றவைகளுக்கே இக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், வடமராட்சி முன்னாள் லயன்ஸ் கழக தலைவர் எஸ், தணிகாசலம், சனசமூக நிலையத் தலைவர்கள் உட்படபல பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவை அலுவலர்களும் கலந்து சிறப்பித்தனர். (இ -109)

## கட்டாக்காலி மாடுகளால் வயல்களில் பெரும் அழிவு

வட்டுக்கோட்டை, அராலிப் பகுதி வயல்களில் நீர்ப்பாய்ச்சி பயிரிடப்பட்ட நெல் வயல்களில் கட்டாக்காலி மாடுகள் பெரும் அழிவை ஏற்படுத்துகின்றன.

மாடுகளை வளர்ப்போர் மழை இல்லாத காரணத்தால் மாடுகளை அவிழ்த்து விடுகின்றனர்.

நவாலி, ஆனைக்கோட்டையில் இருந்து கல்லுண்டாய்ப் பகுதிக்கு மேய்ச்சலுக்காக வரும் நூற்றுக்கணக்கான மாடுகள் அராலிப் பகுதிக்குள் நுழைந்து பெரும் அழிவை ஏற்படுத்துவதாக விவசாயிகள் முறையிடுகின்றனர்.

கொளுத்தும் வெயிலிலும் தமது வயல்களில் காவல் நிற்க வேண்டி இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (இ-12)

## சமாதானம் ஏற்பட உதவுமாறு மகாசங்கத்திடம் கோரிக்கை

நாட்டில் எரியும் பிரச்சினையாக உள்ள யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தும் திட்டத்துடன் ஒன்றிணையுமாறு நடவடிக்கைகளின் போது காணாமற்போன படையினரின் உறவினர்கள் மகா சங்கத்தினரைக் கேட்டுள்ளனர்.

வடபகுதிக்கு மேற்கொள்ளப்படவிருக்கும் சமாதானப் பேரணியில் கலந்து கொள்ளுமாறும், சத்தியாக்கிரகங்களை நடத்துமாறும் காணாமற்போன படையினர் அமைப்பின் தலைவர் ஈ. பி. நாணயக்கார மகா சங்கத்தினரிடம் கோரியுள்ளார்.

இந்தச் சமாதானப் பேரணியினர் விடுதலைப் புலிகளையும் சந்திக்கவிருக்கின்றனர்.

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை அமுல் செய்வதன் மூலமே யுத்தத்தை விரைவாக முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று அந்த அமைப்பு மகா சங்கத்தினரிடம் தெரிவித்துள்ளது. (இ-3)

## தனிநாட்டுக் கோரிக்கை குறித்தும்...

(நான்காம் பக்க தொடர்ச்சி)

பொழுது கூட, சர்வஜன வாக்கெடுப்பொன்றை அரசு தனக்கு விரும்பிய மாதிரி ஏற்பாடு செய்ய முடியும். இது அந்த சர்வ ஜன வாக்கெடுப்பை தோல்விக்கும் இட்டுச் செல்லலாம். ஏனெனில் இங்கு நடக்கும் தேர்தல்கள் நீதியாக, நேர்மையாக சட்டத்திற்குட்பட்டு நடக்கும் என்றெல்லாம் நாம் எதிர் பார்க்க முடியாது. அரச இயந்திரம், இனவாத சக்திகள் யாவும் இப்படியான தேர்தலை தோற்கடிக்கவே செய்யும் என்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

இத்தீர்வுத்திட்டத்தை சிங்கள மக்கள் மத்தியில் விற்பனை செய்வதற்கு, இதனை விட்டால் வேறு வழியில்லை என அரசாங்கம் சில சமயம் கூறக்கூடும். அரசாங்கம் அப்படி நினைத்தால் அரசாங்கம் மீண்டும் சிங்கள இனவாத சக்திகளுக்கு வளைந்து கொடுக்கின்றதென்றே அர்த்தப்படும். ஏற்கனவே ஐ. தே. கவின் விருப்பத்திற்கிணங்க அதிகாரப் பகிர்வில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனைப்போன்றே அதிகார அலகு என் பதிலும், அரசு வளைந்து கொடுக்குமாயின் தீர்விற்கான அரசாங்கத்தின் 3 வருட முயற்சி விழலுக்கு இறைத்த நீராகவே முடியும்.

முஸ்லிம் தனி மாகாணம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப்பின் தனி மாகாணக் கோரிக்கையானது இன்னும் விசித்திரமாக உள்ளது. முதலாவதாக முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கோ அல்லது அவர்களது கோரிக்கைகளுக்கோ, ஈ. பி. ஆர். எல். எவ். எதிரானதல்ல என்பதை முதலில் நாம் கூறிவைக்க வேண்டும்.

ஆனால் அஷ்ரப்பின் கோரிக்கையான தென்கிழக்கு மாசாணசபை என்பது உண்மையிலேயே அம்மக்களின் விருப்பங்கள், கோரிக்கைகளில் இருந்து உருவானதா? அல்லது தனது சொந்த அரசியல் நலன்களுக்காக அவர் உருவாக்கிய கோரிக்கையா என்பதை நாம் ஆராய வேண்டும்.

''திருமலையும், மட்டக்களப்பும் வடக்குடன் இணைந்தால் எனக்கு தென்கிழக்கு மாகாண சபை வேண்டும், இல்லையேல் எனக்கு எதுவும் தேவை இல்லை கிழக்கு மாகாணத்துடன் இருந்துவிட்டுப் போகிறேன்'' என்பது அவரின் கோரிக்கையின் [illegible] அமைகிறது.

கிழக்கு மாகாணத்தில் 37% மான முஸ்லிம் மக்களே வாழ்கின்றார்கள். கிழக்கு மாகாணம்தனி மாகாணமாகஇருந்தால் அங்கு முஸ்லிம் சிறுபான்மை இனமாகவே இருக்கும் அப்படியான சூழலில் அஷ்ரப் கூறும் முஸ்லிம் மக்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படும்? மட்டக்களப்பு, திருகோணமலை வடக்குடன் இணைந்தால் இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள முஸ்லிம்களின் உரிமைகளை அஷ்ரப் எவ்வாறு பாதுகாப்பார்?

உண்மையில் முஸ்லிம் மக்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கலாம். அதற்கான நடைமுறைச் சாத்தியமான யதார்த்தமான கோரிக்கைகளை வைத்து அவற்றை வென்றெடுப்பதே சரியான' அணுகுமுறையாக இருக்கும்.

வட-கிழக்கு இணைந்த அலகுக்குள் முஸ்லிம் மக்களுக்கு ஓர் உப அலகை ஏற்படுத்தலாம் என்றால் ''உப அலகு', என்ற பதத்துக்கே இடமில்லை; தமிழருக்கு எவ்வளவு ஒதுக்குகின்றார்களோ அவ்வளவு எனக்கு வேண்டுமென்பதும் ஏட்டிக்குப் போட்டியான சொற்பிரயோகங்களாக இருக்கின்றனவே தவிர திட்டவட்டமான கோரிக்கைகளாகத் தென்படவில்லை. ஒரு பிரச்சினையைத் தீர்க்கும்போது. யதார்த்த நிலைமைகளைக்கவனத்திலெடுத்து சில சமரசங்களுக்கு, விட்டுக்கொடுப்புகளுக்குப் போவதென்பது வேறு. பிரச்சினைகளை உணர்வுபூர்வமாக அணுகாமல் குறுகிய அரசியல் நலனுக்காக, அம்மக்களையே பாதிக்கும் கோரிக்கைகளை ஏட்டிக்குப் போட்டியாக முன்வைப்பதென்பது வேறு.

எனவே அமைச்சர் அஷ்ரப் அவர்களின் கோரிக்கை சரியானதுதானா? தேவையானதுதானா? என்பதை முஸ்லிம் மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

மொத்தத்தில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்ற விடயத்தை அரசு சரியாகவும், கவனமாகவும் கையாளாவிடில், இது புதிய பல பிரச்சினைகள் தோன்றவே வழி வகுக்கும். வடக்கு—கிழக்கு என்பது தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசம். கடந்த 10வருடங்களாக இது இணைக்கப்பட்டுள்ளது. இவ் இணைப்பை நிரந்தரமாக்குவதுதான் இன்றைய முக்கிய விடயமே தவிர, உள்ளதையும் இல்லாமல் செய்வதல்ல, ரகம் ரகமான சர்வ ஜன வாக்கெடுப்புகள் நிலைமைகளை மேலும் சிக்கலாக்கும் என்பதை அரசு யோசிக்க வேண்டும். ★

## 31 ஆம்நாள் நினைவஞ்சலி



மலர்வு: 03 — 10 — 1925

உதிர்வு: 08 — 09 — 1997

### அமரர் முருகேசு கந்தசாமி

(பிரபல வாகன திருத்துனர், V. K. மோட்டோர்ஸ் உரிமையாளர், நெல்லியடி)

எங்கள் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருற்றிருக்கும்:
குடும்பத்தினர்.

வரணியாத்தோட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி

(சி-1708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாஹோவில் புகையிலை, கடலட்டை

மாஹோ கப்பல் மூலம் குடா நாட்டிலிருந்து புகையிலையுடன் கடலட்டை, சங்கு, வெங்காயம் ஆகிய பொருள்களும் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

தனியார் வர்த்தகர்களும், கூட்டுறவுச் சங்கத்தினரும் இப் பொருள்களை கப்பல் மூலம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்கின்றனர். இவற்றில் புகையிலைச் சிப்பங்களே மிக அதிகமாக உள்ளன. (ஐ-173)

## முதியோர் - சிறுவர் தின விழா

தெல்லிப்பழை பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர் தின விழாவும் முதியோர் தின விழாவும் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் வலி, வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் தலைமையில் நடைபெறும்.

விழாவின் போது 100 முதியோர்கள் கௌரவிக்கப்பட்டு 100 சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். குறிகாட்டுவான் பஸ் சேவை; சீராக நடத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவுக்கு கடமையின் நிமித்தம் நாளாந்தம் சென்று வரும் அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைக்கு நேரத்துடன் செல்லவும், கடமை முடிந்து நேரத்துடன் வீடு திரும்பவும் வசதியாக யாழ்ப்பாணம்— குறிகாட்டுவான் 776 இலக்க பஸ் சேவையை சீராக நடத்தக்கோரி 512 ஆவது படைப்பிரிவு அதிகாரிக்கு மகஜர்ஒன்றை அனுப்பி உள்ளனர்.

பாடசாலை அதிபர்கள், கிராம சேவையாளர்கள், புங்குடுதீவு உப தபாலதிபர், வேலணை பிரதேச சபை ஆயுள்வேத வைத்திய அதிகாரி மற்றும் புங்குடுதீவு பாடசாலையில் கடமை புரியும் ஆசிரியர்கள் ஆகியோர் கையொப்பமிட்ட இந்த மகஜர் கடந்த வியாழக்கிழமை யாழ். ஞானம்ஸ் ஹோட்டல் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். — குறிகாட்டுவான் பஸ் சேவையை தினமும் காலை 7.45 மணிக்கு பிந்தாமல் ஆரம்பிக்க வேண்டும் என்றும் —

யாழ்ப்பாணத்தில் இருந்து தினமும் நண்பகல் 12.00 மணிக்கு வேறொரு பஸ்ஸை புங்குடுதீவுக்கு அனுப்பி அங்குள்ள பிரயாணிகளை நேரத்துடன் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர வேண்டும் என்றும்— அந்த மகஜரில் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

இதனையடுத்து யாழ்.நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக நேரடியாக அழைத்து, பஸ் சேவை ஒழுங்காக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பரிசளிப்பு விழா

சங்கானை மாவடி ஞான வைரவர் கோயிலின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

சங்கானை மாவடி ஞான வைரவர் கோயில்பரிபாலன சபை செயலாளர் க. நல்லையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சங்கானைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ.கணேசலிங்கம் பிரதம விருந்தினராகப் பங்கேற்கின்றார். (இ-4)

## மீண்டும் மீனவர் நிவாரணம்

கடந்த இரண்டு மாத காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மீனவ நிவாரணம் யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவின் அனுமதியை அடுத்து மீண்டும் நாளை வியாழன் தொடக்கம் வழங்கப்பட உள்ளதாகவும் —

2 ஆம் கட்டத்துக்கே பொருள்கள் வழங்கப்படும் எனவும் —

மருதங்கேணி, மணற்காடு, வல்லிபுரக்கோயில் கிளைக் கடைகளில் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும் எனவும் — மருதங்கேணி பிரதேச செயலர் சி. பசுபதி தெரிவித்தார். (இ-36)

## கோப்பாயில் மூக்குக்கண்ணாடிகள்

யாழ்ப்பாணம், ஒக். 8

கோப்பாய் லயன்ஸ்க் கழகத்தின் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் லயன்ஸ் கழக வலயம் ஒன்றின் தலைவர் டாக்டர் எஸ். எஸ்.அருளானந்தம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கண்பார்வை குறைந்த ஒரு பகுதியினருக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். [இ-9]

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா

வடமராட்சி, ஒக். 8

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை கல்லூரி அதிபர் திருமதி நஞ்சனிபோல் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு சி. சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சிவராசா பரிசில்களைவழங்குவார். [-இ173]

### கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்புக்களை நடத்த முடியுமெனில்

# தனிநாட்டுக் கோரிக்கை குறித்தும் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தலாமே!

## அரசின் முடிவு பல புதிய பிரச்சினைகளை உருவாக்கும்

ஏ.கைலைநாதன்
மத்திய குழு உறுப்பினர், ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி

கடந்த செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி, அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும், அதிகார அலகு தொடர்பாகவும் இறுதி முடிவினை எடுப்பதற்கு, ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. 5 மணி நேரத்துக்கு மேலாக நடந்த அந்த அமைச்சரவைக் கூட்டத்தின் இறுதியில், அதிகாரப் பகிர்வினை ஏற்றுக் கொள்வதாகவும் (என்னென்ன அதிகாரங்கள் என்பது அமைச்சரவைக்கே வெளிச்சம்) அலகு தொடர்பாக வெவ்வேறுபட்ட வாக்கெடுப்புக்களை கிழக்கு மாகாணத்தில் நடத்தி அதனடிப்படையில் அலகை நிர்ணயிப்பதாகவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் இரண்டாம் தரப் பிரசைகளாக நடத்தப்படுகின்றார்கள். வரலாற்று ரீதியாக அவர்கள் வாழ்ந்து வரும் நிலப்பரப்பு அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் பறிக்கப்படுகின்றது. அத்துடன் இக்குடியேற்றங்களால் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பிரதேசங்களில் அவர்கள் சிறுபான்மையினராக்கப்பட்டு, அவர்களின் தனித்துவமே அழிந்து போகின்றது. நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொல்வதன் மூலமோ, அல்லது சாத்வீகப் போராட்டங்களை நடத்தியும் கூட அரசின் செவிப்பறைகளில் இது உறைப்பதாயில்லை என்ற நிலையின் பின்னரே நாம் தனிநாடு கேட்டு, ஆயுதமேந்திப் போராட வேண்டி ஏற்பட்டது.

1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, ஏற்பட்ட ஓர் தற்காலிகமான தீர்வின் அடிப்படையில் சகல இயக்கங்களையும் ஜனநாயகப் பாதைக்கு வருமாறு இந்தியா அழைத்தது. அதன் பிரகாரம் சகல தமிழ் இயக்கங்களும் ஜனநாயப் பாதைக்குத் திரும்பின. (புலிகளும் கூட இதனை ஏற்று, பின்னர் அதிலிருந்து விலகிக் கொண்டார்கள்) இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாண சபை என்ற அமைப்பு முறை ஒன்று இலங்கையில் உருவாக்கப்பட்டது. இதன் பிரகாரம் மாகாண சபைகளுக்கு, சில அதிகாரங்களும் வழங்கப்பட்டன. இலங்கை அரசியல் சாசனத்திற்கான 13 ஆவது திருத்தச்சட்டமானது இவ் வதிகாரங்களை நிரல்படுத்திக் காட்டுகின்றது.

### இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னடைவுகள்

ஒற்றையாட்சி முறைக்குள் இவ்வதிகாரங்கள் பகிரப்பட்டதால், மாகாண சபைகள் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல சிரமங்கள் ஏற்பட்டன. மாகாணசபைகள் உருவாக்கும் சட்டங்கள் யாவும், நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்க வேண்டிய நிலை இருந்து வந்தது. மாகாண சபைகள் சட்டவாக்கும் உரிமைகளைக் கொண்டிருந்த போதும், அரசியல் சாசனத்தில் 65 ஆவது சரத்தின் பிரகாரம் '' நாடாளுமன்றமானது தனது சட்டவாக்கும் உரிமையை தனக்கு கீழுள்ள எந்த ஓர் உப பிரிவுக்கும் பகிர்ந்து கொடுக்கக்கூடாது'' என்பதை திட்டவட்டமாகக் கூறுவதால் மாகாணசபைகள் இயற்றும் சட்டங்களை நாடாளுமன்றம் ஆராய்ந்து அங்கீகரிக்க வேண்டி இருந்தது. இவ்வகையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் சில பின்னடைவுகள் இருந்தன என்பது உண்மையே.

ஆனால், அதே சமயம் இந்திய - இலங்கை ஒப்பந்தமானது சில விடயங்களில் முற்போக்கானதாக இருந்தது. மாகாண சபைகளை தமது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்யும் வரை ஜனாதிபதியால் கூட கலைக்க முடியாதென இருந்தது. பின்னர் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாச, மாகாண சபைகள் தேர்தல் சட்ட மூலத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்ததன் மூலம் அப்பொழுதிருந்த ஈ பி. ஆர் எல். எவ். இன் வட- கிழக்கு மாகாண சபையைக் கலைத்தார்.

இதனைப் போன்றே வடக்கு — கிழக்கு என்பதும் தற்காலிமாக இணைக்கப்பட்டிருந்தது. கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதன் மூலம் இது நிரந்தரமாக்கப்படுமென இந்திய இலங்கை ஒப்பந்தம் கூறிய பொழுதிலும், ஜனாதிபதி விரும்பும் பட்சத்தில் இச்சர்வஜன வாக்கெடுப்பானது பிற்போடப்படலாம் என்ற சரத்தும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### எழுதாத உத்தரவாதம்

உண்மையில், தமிழ்க்கட்சிகள் ஆரம்பம் முதல் வடக்கு கிழக்கு இணைப்பை நிர்ப்பந்தித்ததாலும், சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்ததாலுமே, இச்சரத்து இந்திய -இலங்கை ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டது. இதன் பிரகாரம், கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட மாட்டாது என்ற எழுதாத உத்தரவாதம் ஒன்று அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் சகல [illegible] அதன் பிரகாரமே கடந்த 10 வருடங்களாக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு என்பது பிற்போடப்பட்டு வருகின்றது.

முக்கியமாக சிங்கள மக்கள் மத்தியில் எழக்கூடிய சலசலப்புக்களை இல்லாமல் செய்யவே இந்த சர்வஜன வாக்கெடுப்பு என்ற வாசகம் சேர்க்கப்பட்டது. கடந்த 10 வருடங்களாக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு பிற்போடப்பட்டு வருவதற்கு இதுவே காரணமாகும். 1987க்கு பின்னர் கிழக்கில் பல தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல். இரண்டு நாடாளுமன்றத் தேர்தல், இரண்டு ஜனாதிபதித் தேர்தல் என பலதேர்தல்கள்நடந்துமுடிந்து விட்டன. எனவே அங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடியாதென்பதல்ல. ஆனால் அதனை நடத்துவதில்லை என்பதே எழுதாத ஒப்பந்தமாகும்.

### மழுங்கடிக்கும் நோக்கம்

ஆனால் இன்று அலகு தொடர்பாக சந்திரிகா அவர்களின் அமைச்சரவை எடுத்த முடிவானது, தமிழ் மக்களின் கோரிக்கைகளை மழுங்கடிக்கும் நோக்கில் எடுக்கப்பட்டதாகவே தோன்றுகின்றது. முதலாவதாக வடக்குடன் இணைய விருப்பமா எனத் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒரு தேர்தல்; அவர்கள் விருப்பம் தெரிவித்தால் அம்பாறை மாவட்டத்தை தனி மாகாணமாக்க முஸ்லிம் மக்கள் விரும்புகின்றார்களா என்பதைக் கண்டறிய அம்பாறை மாவட்டத்தில் (அம்பாறைத் தேர்தல் தொகுதிதவிர்ந்த98% சிங்கள மக்கள்வாழும் பிரதேசம்) ஒரு சர்வஜன வாக்கெடுப்பு; அதிலும் அவர்கள் சம்மதம் தெரிவித்தால் அம்பாறைத் தேர்தல் தொகுதியில் உள்ள சிங்கள மக்கள் முஸ்லிம் மாகாண சபையுடன் இருப்பதா அல்லது மொனறாகலை மாவட்டத்துடன் இணைவதா என்பதைக் கண்டறிய அம்பாறைத் தேர்தல் தொகுதியில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு; என மூன்று வெவ்வேறு சர்வஜன வாக்கெடுப்புகளை நடத்த உள்ளதாக 29ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது அரசு மிகவும் ஜனநாயக பூர்வமாகவே நடந்துள்ளது போலவும், மட்டக்களப்பு, திருகோணமலையை இணைந்த பிராந்தியத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதால், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தினால் வடக்குடன் இணைய அவர்கள் ''ஆம்'' என்று வாக்களிப்பார்கள். அத்துடன் பிரச்சினைகள் முடிந்துவிடும் என அரசு யோசிக்கலாம். இல்லை என வாக்களித்தாலும் பெரும்பான்மை தமிழ் மக்களுக்கு விருப்பமில்லை, ஆகவே, கிழக்குதனிமாகாணமாக இருப்பதையும் நியாயப்படுத்த முடியுமெனவும் அரசு யோசிக்கலாம். இது நீதியான ஒரு ஜனநாயக முடிவாகவும் தோற்றலாம்.

அப்படியாயின் —

20 வருடங்களாக தனி நாடு கேட்டு தமிழ் மக்கள் போராடி வருகின்றார்கள். வடக்கு - கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி ஏன் தமிழ் மக்களுக்கு தனி நாடு விருப்பமா அல்லது இணைந்த சிறீலங்காவுக்குள் வாழ விருப்பமா என்பதைக் கேட்டறியலாமே. மேற்கூறியவையாவும் பெரும்பான்மை மக்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கும் ஜனநாயகப் பண்புகளெனில் இறுதியாக நான் கூறியதும் சரியானதொரு ஜனநாயக நடவடிக்கை தானே?

இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து இன்றுவரை வடக்கு — கிழக்கு தமிழ் மக்கள் இணைப்பாட்சிக்கும், பின்னர் தனி நாட்டுக்குமென தமது விருப்புகளை பல்வேறுபட்ட தேர்தல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். அப்படி இருக்கும் பொழுது இப்பொழுது புதிதாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு எதற்கு?

### விருப்பத்துக்கு ஏற்பாடு

ஒன்றை யாரும் மறந்து போக முடியாது திருமலை, மட்டக்களப்பு இணைந்த பிரதேசத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருந்த

( 5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் தலைவரை கொலை செய்ய மொஸாட் உளவாளிகள் முயன்றனர்?

## விசாரணைக் குழு நியமிக்க இஸ்ரேல் பிரதமர் இணக்கம்

ஜெருஸலம், ஒக். 8
பலஸ்தீன தீவிரவாத இயக்கமான ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் காலித மெஸால் என்பவரை இஸ்ரேலின் உளவுப் பிரிவான மொஸாட் கொலை செய்ய முயற்சித்ததாக வெளியான குற்றச் சாட்டுக்களை விசாரிக்க விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க உள்ளதாக இஸ்ரேல் பிரதமர் நத்தனியாகு- அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் ஜோர்தாவின் தலைநகரமான அம்மானில் வைத்து இந்த கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஜோர்தானுக்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான நல்லுறவைப் பாதிக்கும் என்றும் —

இது குறித்து முழு விசாரணை நடத்தப்படும் என்றும் —

எனினும் பயங்ரவாதத்துக்கு எதிரான இஸ்ரேல் அரசின் நடவடிக்கைகள் தொடரும் என்றும் இஸ்ரேல் பிரதமர் நத்தனியாகு அறிவித்துள்ளார்.

இந்தக்கொலை முயற்சி சம்பவம் தொடர்பாக இஸ்ரேல் ஏஜென்ட்டுகள் எனக் கருதப்படும் இருவர் கைதாகி இருப்பதாக ஜோர்தான் அரசு அறிவித்துள்ளது.

1994 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது தெரிந்ததே.

இஸ்ரேல் — பலஸ்தீன தலைவர்கள் இம் மாதம் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இருந்த சமயம் வெளியாகி உள்ள இந்தக் கொலை முயற்சிக் குற்றச் சாட்டுகள் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

அரபுக்கள் வாழும் கிழக்கு ஜெரூஸலத்தில் புதிதாக யூதக்குடியிருப்புக்களை அமைக்கும் இஸ்ரேலின் திட்டத்தினால் கடந்த ஏழு மாதகாலமாக இஸ்ரேல் — பலஸ்தீன சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருந்தன. (இ)

## 11 பேரின் சடலங்கள் கண்டு பிடிப்பு

புதுடில்லி, ஒக். 8
சென்ற மாதம் 26 ஆம் திகதி மலாக்கா நீரிணையில் மூழ்கிப் போன இந்திய சரக்குக் கப்பலில் இருந்த 29 பேரில் 11 பேரின் சடலங்களை மலேசியக் கடற்படையின் சுழியோடிகள் கண்டு

உலக அரங்கில்

பிடித்துள்ளனர்.

எம். வீ. விக்கிரமன் என்ற அந்தக் கப்பலின் பல்வேறு பகுதிகளிலும் உடல்கள் சிக்கிக் கொண்டிருப்பதாக சுழியோடிகள் தெரிவித்தனர். (இ-9)

## இந்திய- பாக். தளபதிகள் தொலைபேசியில் தொடர்பு

காஷ்மீர் பகுதியில் நிலவும் பதற்ற நிலையைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய — பாகிஸ்தான் இராணுவ தளபதிகள் திங்களன்று நேரடித் தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இது குறித்து இருநாட்டு பிரதமர்களும் பேசிக் கொண்டதன் விளைவாக நேற்றைய தொடர்புகள் இடம்பெற்றன. (இ)

## செய்மதி செயல் இழந்ததால் பங்குச் சந்தை மூடப்பட்டது

லண்டன், ஒக். 8
இந்தியாவின் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் செயலிழந்ததைத் தொடர்ந்து, பங்குகளை வாங்கும், விற்கும் முக்கிய இடமான மும்பாய் பங்குச் சந்தை மூடப்பட்டுள்ளது.

இந்தப் பங்குச் சந்தை வணிகம் செய்வதற்காக இந்தச். செயற்கைக் கோளைப் பயன்படுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## வட கொரியத் தலைவராக கிம் - இல் - சுங்கின் புதல்வர்

### உத்தியோக பூர்வமாகத் தெரிவாவார்

பியாங்யொங் ஒக். 8
வட கொரியா சுமார் மூன்று வருட கால இடைவெளிக்குப் பின்னர் உத்தியோகபூர்வமான தேசத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய ஆயத்தமாகின்றது.

இது சம்பந்தமான விசேட அறிவித்தல் எதுவும் வெளியிடப்படாத போதிலும் முன்னைய தலைவர் கிம்—இல்—சுங்கின் சிரேஷ்ட புதல்வர் கிம்-யொங்-இல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தலைவராகத் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ராலினிச கொள்கைகளை இன்னமும் கடைப்பிடித்து வரும் நாடு என்று கருதப்படும் வடகொரியா அதன் ஆரம்பத்திலிருந்தே கிம்—இல் சுங்கை தலைவராகக் கொண்டிருந்தது.

அவர் 1994 ஆம் ஆண்டு மரணமடைந்த பின்னர் அவரது மகன் நாட்டு நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். எனினும் ஆளும் தொழிலாளர் கட்சியிலோ அல்லது அரசாங்கத்திலோ எவ்வித பதவியையும் அவர் வகிக்கவில்லை.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அவர் கட்சியின் செயலாளராக நியமிக்கப்படுவதுடன் தேசத்தலைவர் என்ற அந்தஸ்தும் அவருக்குச் கிடைக்கும் என்று ராஜதந்திரிகள் தெரிவித்தனர் [இ-9]

## நேபாளத்தில் புதிய பிரதமர் பதவி ஏற்பு

சென்னை. ஒக். 8
நேபாளத்தின் புதிய பிரதமமந்திரி யாக சூரிய பகதூர் சாத்தா பதவியேற்றுள்ளார். நேபாள மன்னரால் நேற்றுக் காலை இவருக்கு பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைக்கப்பட்டன.

சூரிய பகதூர் சாத்தாவின் ராஜ்ரிய பிரஜா தந்திரக் கட்சியைச் சேர்ந்த ஐவரும் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஓர் உறுப்புக் கட்சியான நேபாள சத்தாவனக் கட்சியைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் ஆறு அமைச்சர்களும் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்கள்.

கூட்டணியின் மூன்றாவது கட்சியான நேபாளக் காங்கிரஸ் கட்சி பிறகு அரசாங்கத்தில் சேர்ந்து கொள்ளும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

(இ-9)

## மலேரியா வயிற்றோட்டம் பரவுகிறது

செம்பியன்பற்று. ஒக். 8
வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தகத்தில் கடந்த வாரங்களில் சிகிச்சை பெற்றோரில் அனேகமானோர் மலேரியாக் காய்ச்சலாலும், வயிற்றோட்டத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் மலேரியாவும், வயிற்றோட்டமும் வேகமாகப் பரவுவதாக அம்பன் மத்திய மருந்தக வைத்திய அதிகாரி கே. ரட்ணசபாபதி தெரிவித்தார். (இ-36)




## நூல்நிலையக் கட்டடம்

தென்மராட்சி, ஒக். 8
கடந்த வருடம் தென்னை மரம் வீழ்ந்து சேதமடைந்த சாவகச்சேரி சரசாலை பொது நூல் நிலையக் கட்டடம் 90 ஆயிரம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது. (இ-117)

## கட்டடம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக. 8
அகதிகளுக்கான ஐ. நா. தூதரக உதவியோடு நிறுவப்பட்ட கைதடி குமரநகர் சனசமூக நிலைய மழலைகள் முன்பள்ளிக் கட்டடம் கடந்த 29 ஆம் திகதி நிலையத் தலைவர் க. சிவகுரு தலைமையில் நடந்த வைபவத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் திறந்து வைக்கப் பட்டது. (இ)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெற்று வரும் அர்த்தமற்ற கைதுகள், காணாமற் போதல் போன்றவற்றைக் கண்டிக்கும் முகமாக ''புளொட்'' அமைப்பின் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினர் வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர்.

வவுனியா கந்தசுவாமிகோயிலடியில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தில் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரையும் —

ஐ. ம. வி. மு. வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன், உப தலைவர் கே. மாணிக்கதாசன், நகரசபைத் தலைவர் வி ரி. லிங்கநாதன், செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் சி கிஷோர் ஆகியோர் உண்ணாவிரத மேடையில் இருப்பதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்; உதயன் வவுனியா செய்தியாளர்)



உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட திட்ட அமுலாக்கல், நாடாளுமன்ற அமுலாக்கல் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அதனை முடித்து வைத்துப் பேசும் போது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்


### உடன் விற்பனைக்கு

பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன்விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.
(50368)

அழகிய பல நிறங்கள் உடைய கலர் வளர்ப்பு மீன்கள், கோல்ட் பிஸ் கலிக்கோ, ஏஞ்சல் பைற்றர், மற்றும் பலஇன மீன்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (50367)

### தவறிவிட்டது

மானிப்பாய் லோட்டன் வீதியைச் சேர்ந்த மூத்த தம்பி தேவதாசன் என்பவரது 422391924V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் 0905004591 இலக்கமுடைய விசேட அடையாள அட்டை என்பன யாழ். நகர் பள்ளிவாசல் ஒழுங்கையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். குகன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம். [50356]

புத்தூரைச் சேர்ந்த கி. மகேந்திரன் குடும்பத்தின் நிவாரண உணவு முத்திரை இருபாலைக்கும், புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம். புத்தூர். கிளை இல. 22
[50357]

பாலசுப்பிரமணியம் நாகராஜ் என்பவரது நீலநிறமுடைய டயறி மற்றும் படங்கள், முக்கிய ஆவணங்களுடன் பலாலி வீதிக்கும் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும், ஆலடிலேன், ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
[50363]

### புல்லாங்குழல் வகுப்பு

11 - 10 - 97 விஜயதசமி அன்று புல்லாங்குழல் புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும். தொடர்பு: இல. 95A கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்)
[50345]

### தென்னம் நாற்றுக்கள்

உடன நடுகைக்குகந்த, நல்இன தென்னம் நாற்றுக்கள் செவ்விளை, வத்தாவி, மாலைதீவு, சாதாரணம் குறுகிய காலத்தில் பலன் தரக்கூடியவை விற்பனைக்குண்டு. தொடர்பு; மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை.
[50101]

அரியாலை
புனித யூதா
மூலமாக பெற்ற
வரங்களுக்கு
நன்றி
அரியாலை
புனித யூதா
பெயர் வாழ்க
MRM
(50343)

## அஜந்தாஸ் ஸ்ருடியோ

★ உங்கள் உடன் தேவைக்கான கறுப்பு, வெள்ளைப் படங்கள் துரிதகதியில் படம் எடுத்துக் கொடுக்கப்படுகின்றன.

★ அந்தியேட்டிக்கான பெரிய படங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன.

★ கலர்ப் படங்கள் யாவும் சிறந்த முறையில் எடுத்து குறித்த தவணையில் தாமதமின்றி கொடுக்கப்படுகின்றன.

★ இது கால வரையில் எடுக்கப்பட்ட கலர்ப் படங்கள் யாவும் வந்துள்ளன. உடன் வந்து பெற்றுக் கொள்ளவும். சிரமத்திற்கு வருந்துகிறோம்.

வதிரி, நெல்லியடி.
(50274)

## தேவை

சர்வதேச தொண்டு நிறுவனமான
MSF இற்கு
(வரையறையற்ற
வைத்திய சேவை நிறுவனத்திற்கு)
யாழ். நகரில்
பெரிய வீடு ஒன்று
வாடகைக்குத் தேவைப்படுகிறது.
தொடர்பு:
Mr. KEITH,
C. L. S. புத்தக நிலைய ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (50245)

## நல்லூர் தூரிகையின் கிளை நெல்லியடியிலும் உதயம்!

★ சித்திரம் ★ சங்கீதம் ★ நடனம்
★ மனையியற்கலைகள்
பல்வேறு கலைசார் பயிற்சிகளுடன்
**11 - 10 - 1997 [ சனி ]**
விஜயதசமி தினத்திலிருந்து
புதிய ஆரம்பம்:
**தூரிகை நுண்கலை வளாகம்**
[ நெல்லியடி ம. ம. வி. முன்பாக ]
நெல்லியடி.
[50312]

## ஜெயா அழகு மாடம்

127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### வியாபாரிகளுக்கு

மீண்டும் சகல பொருள்களும் கொழும்பில் இருந்து நேரடியாகத் தருவிக்கப்பட்டுள்ளன.

★ ஆண், பெண் தையல் உபகரணங்கள்
★ மணிக்கூட்டு வகைகள்
★ எவர்சில்வர், பிளாஸ்ரிக் பொருள்கள்
★ (B) பாக், பெல்ற் வகைகள்
★ வெளிநாட்டு பவுடர், கொலன் வகைகள்
★ விளையாட்டு, அன்பளிப்புப் பொருள்கள்
மற்றும்
★ அழகு சாதனப் பொருள்கள்

ஆகியவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
நியாயமான விலைகளில்
பெற்றுக் கொள்ளலாம்.

கிளை:
**இல: 149 [357] நியூ மார்க்கட்**
(வைரவர் கோயில் அருகில்)
யாழ்ப்பாணம்.
(சி/1701)


## நன்றிகள் பல

சாவகச்சேரி கல்வயல் வேதவன விநாயகர் ஆலயத்தில் ஆலய அன்பர்களால் எமக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் தலைமை வகித்துச் சிறப்பித்த சிவஸ்ரீ சி, சிதம்பரநாதக் குருக்கள், பட்டமளித்துக் கௌரவித்த பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர், ஆசியுரை நல்கிய சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள், அருளுரை வழங்கிய நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள், வாழ்த்துரை நல்கிய பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை, சிறப்புரை வழங்கிய நீதிபதி திரு. ஏகநாதன், பொன்னாடை போர்த்திக் கௌரவித்த சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், பாராட்டுப் பாவிசைத்த சங்கீத ஆசிரியை திருமதி ஆ. சுந்தரவல்லி, விழா அமைப்பாளர்கள் திரு. அ. செல்வராசா, டாக்டர் சி. அருளானந்தம், விதப்புரை வழங்கிய திரு. பண்டிதர் வேலுப்பிள்ளை, ஆசிரியர் சோ. முரளி, நன்றியுரை வழங்கிய ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் திரு. வே. தம்பிப்பிள்ளை, விழா அமைப்பாளருடன் இணைந்து விழாவினைச் சிறப்பித்த கல்வயல் இந்து இளைஞர் மன்றம், ஆலய அறங்காவலர் திரு. கதிரைவேற்பிள்ளை ஆகிய அனைவருக்கும் ஏனைய சிவாச்சாரியர்கள், அந்தணர்கள் அனைவருக்கும் விழாவில் கலந்து சிறப்பித்த கல்வயல் வாழ் மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எனது உள்ளம் நல்கும் இனிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வேதாகம ஜோதி
கி. சோமசுந்தரக் குருக்கள்
(50365)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 09 — 02 — 1909
விண்ணில்: 08 — 09 — 1997

### அமரர் செல்லப்பா தியாகராஜா

(Retired Field Officer - Rookwood Estate, Hewahete)


பாசமிகு குடும்பத் தலைவனாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் எமை வளர்த்து
ஆளாக்கிய தெய்வமே! உனை
நினைத்து வாடுகின்றோம்
மீளாத்துயில் கொண்டாலும் உங்கள்
அன்பு முகமும் நினைவுகளும்
எமது நெஞ்சை விட்டகலாது நிறைந்து
நின்று எம்மை வழிநடத்தும்.

இவர் தம் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

T. குணசிங்கம் (மகன்)
சேக்கிள் சென்ரர், சங்கானை.
(50355)

## 31 ஆம் நாள் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 20 — 10 — 1927
மறைவு: 08 — 09 — 1997

### அமரர் சுப்பிரமணியம் இராமநாதன்

(ஓய்வு பெற்ற இ. போ. ச. சாரதி)

8-10-97 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

14, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (50354)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஜனாதிபதியின் வாக்குறுதி

கிழக்கு மாகாணத்தில் மூன்று தடவைகள் சர்வஜன வாக்கெடுப்புகளை நடத்துவது என்ற அரசின் முடிவை மீள் பரிசிலனை செய்வதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரமும், சுயகௌரவமும், தன்மானமும் உள்ள மக்களாக வாழ்வதற்கு வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில் தன்னாட்சி அதிகாரம் தேவை என்பதனைத் தமிழ் மக்கள் தமது தளர்த்த முடியாத நிலைப்பாடாகக் கொண்டுள்ளனர்.

இது இன்று நேற்று உண்டான ஒன்று அல்ல. தங்களது அரசியல் உரிமைகள் நசுக்கப்படுகின்றன, பறிக்கப்படுகின்றன என்று உணர்ந்த காலத்திலிருந்தே, அனுபவிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே தமிழர்கள் வகுத்துக் கொண்ட கொள்கையாகும்.

சரியாக நாற்பது வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட பண்டா — செல்வா ஒப்பந்தத்தில் தமிழர்களின் இந்த விருப்பம் பிரதிபலிக்கப்பட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருப்பதனை சிங்கள அரசியல் வாதிகள் தரப்பில் எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ஜே. ஆர். என்ற இலங்கையின் அரசியல் ''குள்ளநரி'' காட்டிய எதிர்ப்பினால், சிங்கள மக்களிடையே தூவிய இனத் துவேசத்தினால், பௌத்த பிக்குமார் மற்றும் பேரினவாதிகளைத் தூண்டிவிட்டதனால் அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வர முடியாத துர்ப்பாக்கியம் ஏற்பட்டது.

எனினும் முப்பது வருடங்களின் பின்னர், வடக்கு — கிழக்கை இணைப்பதனை ஆக்ரோஷமாக எதிர்த்த அதே ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே, அவற்றை இணைத்து இந்தியாவுடன் ஒப்பந்தம் எழுதி நடைமுறைப்படுத்த நேர்ந்தது!

வடக்கு — கிழக்கு இணைப்புக்கு கிழக்கு மாகாண மக்களின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற வாசகம் வெறும் 'எழுத்தா'கவே இருக்கும் என்றே இந்தியத் தரப்பில் வெளிப்படையாகக் கூறப்பட்டு வந்தது.

இந்தியாவின் அரசியல் தரப்புகள் மட்டுமன்றி, வடக்கு — கிழக்கில் மூன்று வருடங்கள் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப் படையின் உயர் அதிகாரிகளும் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு அப்போதைக்கும் சரி, அதன் பின்னரும் சரி நடத்தப்பட மாட்டாது என்று நம்பிக்கை ஊட்டினர். அவர்களில் சிலர் இந்தியா - பாகிஸ்தானுக்கிடையேயான காஷ்மீர் ஒப்பந்தத்தில்எழுதப்பட்டிருந்த சர்வஜன வாக்கெடுப்பு வாசகத்தினை உதாரணமாகவும் எடுத்துக் காட்டினர். அவர்கள் கூறியது போலவே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த ஒப்பந்தத்துக்குப் பிந்திய ஏழு வருடங்களிலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வில்லை,

அந்த நிலையைக் குழப்பி இணைப்புக் குறித்துக் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த இப்போது முனைவது எற்கனவே தமிழர்களுக்குக் கிடைத்த ஒரு பிரதான அடிப்படை உரிமையைப் பறிப்பதாகவே முடியும்.

இப்போதைய அரசமைப்பின் பதின்மூன்றாவது சட்டத் திருத்தத்தினால் வழங்கப்பட்ட உரிமைகளை விட, அதிக உரிமைகளை நிறைவான உரிமைகளை தமிழர்களுக்கு வழங்கப்போவதாகக் கூறிய சந்திரிகா அரசு தமிழர்கள் நீண்ட காலப் போராட்டத்தின் பயனாகப் பெற்ற ஒரு பழத்தையும் பறித்தெடுக்க முனைவதா? இப்போதுள்ள இணைப்பை உடைத்துவிட்டுக் கொண்டு வரப்படும் எந்தத் தீர்வும் நிலைத்து நிற்கமுடியாது.

---

இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் வரை

# பழைய மாணவர் சங்கத் தலைவராக அதிபர் அல்லாதோரும் இருக்கலாம்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 8

''பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களுக்கு அப்பாடசாலைகளின் அதிபர்களே தலைவர்களாக இருக்க வேண்டும் என்று கல்வி அமைச்சின் சுற்றறிக்கை கூறுகின்றது.

''ஆனால் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் இந்த முறையை நடைமுறைப்படுத்த முடியுமா? பாடசாலைச் செயற்பாடுகளுக்கு அது உதவுமா? — என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

''அதுவரை, முன்னர் நடைமுறையில் இருந்த — அதிபராக இல்லாதவர்களை தலைவர்களாகக் கொண்டு பழைய மாணவர் சங்கங்கள் இயங்கலாம் — என்ற ஏற்பாட்டைத் தொடர்வதற்கு அனுமதி வழங்கியுள்ளோம்.''

— இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. சுந்தசாமி.

யாழ்ப்பாணம் வந்துள்ள மாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயன்—சஞ்சீவி பத்திரிகைகளுக்கு விசேட பேட்டி ஒன்றை வழங்கினார்.

அந்தப் பேட்டியின் நடுவிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்களாக அதிபர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில் பெரிய பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை.

பாரம்பரியமான மரபுகளைக் கொண்ட சில பாடசாலைகளில் மட்டுமே இந்த விடயத்தில் பெரும் முரண்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது,

இந்தச் சுற்றறிக்கை தொடர்பான சாதக, பாதக நிலைகளை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா ஆராய்ந்து வருகின்றார். அவர் மிகவிரைவில் இந்த விடயத்துக்கு முடிவுஒன்றை எடுப்பார் அதுவரை தற்போதைய நிலையே தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது. — இவ்வாறு மாகாணக் கல்விப்பணிப்பாளர் குறிப்பிட்டார்.

(மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பேட்டி அடுத்து வரும் தினங்களில் வெளியாகும்) [உ-3]

---

## பாராட்டு விழா

சாவகச்சேரி, ஒக். 8

சாவகச்சேரி கச்சாய் வீதி, றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களை வாழ்த்தும் ''பாராட்டு விழா'' இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் க. தம்பிமுத்து தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்டபிரதிக் கல்விப்பணிப்பாளர் இ. கணேசனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி விகோரியா தேவாலய பங்குத் தந்தை அருட் திரு. பற்றிக் ஞானப்பிரகாசமும், வைத்திய கலாநிதி பே. பிலிப்ஸ், பாடசாலை முன்னாள் அதிபர் த. சின்னத்துரை ஆகியோரும் கலந்து கொள்வர்.

(உ-21)

---

# போலியோ தடுப்பு சொட்டு மருந்து மீண்டும் சனியன்று வழங்கப்படும்

## வலி. வடக்கு - தெற்கில் வழங்கப்படும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 8

போலியோவை முற்றாக ஒழிப்பதற்கான சர்வதேசத் திட்டத்தின் கீழ் குடாநாட்டிலுள்ள ஐந்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் இவ்வருடத்துக்குரிய — இரண்டாவது — இறுதிக் கட்டமாக எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை மீண்டும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

இத்தினத்தினை முன்னிட்டு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பின்வரும் நிலையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ தாவடி — ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி.

★ இணுவில் வடக்கு, இணுவில் தெற்கு — மத்திய மருந்தகம், இணுவில்.

★ சுன்னாகம் வடக்கு — மத்திய மருந்தகம், சுன்னாகம்.

★ உடுவில் தெற்கு — மல்வம் தேவாலயம்.

★ உடுவில் கிழக்கு — மத்திய மருந்தகம், உடுவில்.

★ உடுவில் வடக்கு — இராமநாதன் கல்லூரி.

★ கந்தரோடை — கந்தரோடை சிகிச்சை நிலையம், சங்குவேலி தபாற் கந்தோர்.

★ மல்லாகம் — கல்லாரை சிகிச்சா நிலையம், குளமங்கால் தேவாலயம்.

★ அளவெட்டி மேற்கு — மத்திய மருந்தகம், அளவெட்டி.

★ ஏழாலை மத்தி — மகா வித்தியாலயம், ஏழாலை.

★ ஏழாலை தெற்கு— மத்திய மருந்தகம், ஏழாலை.

★ புன்னாலைக்கட்டுவன் — மத்திய மருந்தகம், புன்னாலைக்கட்டுவன்.

(உ-5)

---

# ஆசிரிய நேர்முகப் பரீட்சை; ஐம்பது வீதத்தினரே வருகை

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பதற்காக யாழ். கல்வித்திணைக்களத்தில் நடந்த நேர்முகப் பரீட்சைக்கு 50சதவீதமானவர்களே சமுகமளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் நடந்த போட்டிப்பரீட்சைகளில்சித்தியடைந்தவர்களில் இருந்து 188 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 3ஆம் திகதி முதல் மூன்றுதினங்கள் யாழ். கல்வித்திணைக்களத்தில் மாகாணக்கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி தலைமையில் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டன.

இந்தநேர்முகப்பரீட்சைக்கு 92 பேர் மட்டுமே சமுகமளித்திருந்தனர் என்றும் —

நான்கு, ஐந்து பேர் தமது வதிவிடத்தை நிருபிக்காததால் நியமனத்தை இழக்க நேரிடும் என்றும் -தெரிவிக்கப்பட்டது.

வடக்கு—கிழக்கில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு180பேருக்கு நியமனம் வழங்கப்படவிருந்தது. (உ-3)

---

# சிப்பாயின் பணம் திருடியதாக மற்றொரு சிப்பாய் கைது

யாழ்ப்பாணம், ஒக், 8

அரியாலைப் பகுதியிலுள்ள 11 ஆவது படையணியில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவர் இன்னொரு சிப்பாயின் பணத்தைக் திருடியதாகத் குற்றஞ் சாட்டப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

அரியாலைப் பகுதியில் கடமையாற்றும் சின்னப்புலாகே பியதாச என்ற சிப்பாயே கைதானவர் ஆவார்.

அவருடன் ஒரே அறையில் தங்கியிருந்த வேறு ஒரு சிப்பாயின் 34 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடியதாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட இந்த சிப்பாய் நேற்று யாழ். நீதிமன்றில் பதில் நீதிபதி திருமதி ச. இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(இ-9)

---

# விசர் நாய் தடுப்பூசி போடப்படும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஒக் 8

யாழ். மாநகரசபை பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ. ஆர். வி. தடுப்பு ஊசி மருந்து போடும் திட்டத்தின் கீழ் இன்று புதன்கிழமை காலை 8- 30 மணி முதல் 10- 30 மணி வரை யாழ். கொட்டடி சனசமூக நிலையத்திலும்—

காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ். கன்னாதிட்டி சனசமூக நிலையத்திலும்—

நாளை வியாழக்கிழமை காலை 8 – 30 மணி முதல் 10 - 30 மணி வரை கொழும்புத்துறை சுவாமியார் வீதி மகப்பேற்று நிலையத்திலும்—

காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கொழும்புத்துறை மத்திய சனசமூக நிலையத்திலும்— தடுப்பூசி போடப்படும்.

(இ-4)

---

## நாளை

**புரட்டாதி 23**

வியாழக்கிழமை

திதி: அட்டமி
முன்இரவு 12.55 வரை.

நட்சத்திரம்: பூராடம்
முன்இரவு 10.02 வரை.

சுபநேரம்: 7.32–9.02

[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

# சிறுவர் -உளநலம் - 08

## பருவமடையும் பருவத்தினர்


★ பூப்பெய்துதல் என்பது, ஆண் பெண் இரு சாராரிலும் ஏற்படும் பாலின முதிர்ச்சியின் தொடக்க காலத்தைக் குறிக்கும் ஒரு சாதாரண உடற்றொழிலியல் வெளிப்பாடாகும்.

★ இந்த வெளிப்பாடு, பெண்களில் யோனிவாய்க் குருதி வெளியேறுகை எனும் தொழிற்பாட்டுடனும், ஆண்களில் விந்து வெளியேறுகை எனும் தொழிற்பாட்டுடனும் ஆரம்பமாகிறது.

★ இந்த வெளியேறுகைத் தொழிற்பாடுகள், பருவமெய்துதலோடு தொடர்புடைய துணைப்பாலியல் இயல்புகளின் விருத்தி, மனவெழுச்சியில் ஏற்படும் மாற்றங்கள் என்பன சேர்ந்து, கட்டிளமைப்பருவத்தினரிடம் பரபரப்பு, பதட்டம், பயம், பதகளிப்பு, கிளர்ச்சி, விடுப்பார்வம் போன்ற உணர்வு நிலைகளைத் தோற்றுவிப்பது இயல்பு.

★ இந்தப் பருவத்திற்குரிய பிள்ளைகள், தமது புதிய அனுபவங்களை ஒத்த வயதினரோடு பகிர்ந்து கொள்வதன் மூலமும், பெற்றோரது புரிந்துணர்வோடு கூடிய வழிகாட்டல்களைப் பெறுவதன் மூலமும் சிறந்த உளநலத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

★ இந்தவாறு, மனந்திறந்த கருத்துப்பரிமாறல்களும் வழிகாட்டல்களும் கிடையாமை; பாலியற் கல்வி நியமமான முறையில் கிடைக்கப்பெறாமை; பாலியலுடன் சம்பந்தப்பட்ட பாரம்பரியமான மூட நம்பிக்கைகள், ஐதிகங்கள், சமூக விலக்குகள் என்பவற்றின் மேலாண்மை யாவும் சேர்ந்து, வேண்டத்தகாத மன அழுத்தங்களை இப்பருவத்தினரிடையே ஏற்படுத்தி, உளநலச் சீரின்மையைத் தோற்றுவிக்கும் என்பதை யாவரும் கருத்திற் கொள்வது மிக இன்றியமையாதது.



ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரும் உலக உளநல நாளை ஒட்டி இக்குறிப்பு பிரசுரமாகிறது.

AHC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் வைத்தே கடவுச் சீட்டு வழங்கல்

## அடுத்த மாதம் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 8

குடாநாட்டிலுள்ள மக்கள் நன்மை கருதி, பாஸ்போர்ட் [கடவுச் சீட்டு] வழங்கும் நடமாடும் சேவை ஒன்று அடுத்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருக்கிறது.

அண்மையில் கொழும்பில் நடந்த அரச அதிபர்களுக்கான அமைச்சுப் பணிகள் தொடர்பான மாநாட்டில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கடவுச் சீட்டுக்களைப் பெறுவதில் யாழ். மாவட்ட மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை அங்கு எடுத்து விளக்கினார்.

இம்மாநாட்டில் பங்குபற்றிய பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் நலன் கருதி நடமாடும் கடவுச்சீட்டு வழங்கும் சேவையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு தமது அமைச்சுச் செயலருக்குப் பணிப்புரை விடுத்தார்.

கடவுச் சீட்டுப் பெறுவதற்கான படிவங்கள் அடுத்த வாரத்தில் யாழ். செயலகத்துக்குக் கிடைக்கும் என்றும்— அவை மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் —

அடுத்த மாத நடுப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நடமாடுஞ்சேவையின் போது கொழும்பு குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் இங்கு வைத்தே கடவுச் சீட்டுக்கள் உரியவர்களுக்கு வழங்கப்படும் என்றும் —

யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (உ-3)

## சிங்கப்பூர் பென்ஷன் வவுச்சர்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள மலேஷியா, சிங்கப்பூர், பர்மா நாட்டு ஓய்வூதியர்களின் செப்டெம்பர் மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் உரிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக செயலக ஓய்வூதியப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மீன் விலை வீழ்ச்சி

வடமாராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள சந்தைகளில் மீன் விலைவீழ்ச்சியடைந்துள்ளது. நாகர் கோவில் மணல்காடு பகுதி சந்தைகளில் கிலோ 40 ரூபா விற்ற குடை மீன் தற்போது 10 முதல் 12ரூபா வரையும் விற்கப்படுகிறது.

# நாடாளுமன்றத்துக்கு பார்வையாளர்கள் செல்வதற்குத் தடை!

மணிலா, ஒக். 8

இலங்கை நாடாளுமன்றத்துக்குள் பார்வையாளர்கள் செல்வதற்கு நேற்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. சில நாள்களுக்கு இத்தடை நடைமுறையில் இருக்கும்.

புலிகளின் தற்கொலைப் படையினர் கொழும்பு நகரில் ஊடுருவியிருப்பதும்—

இதனால் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு குறித்த அச்சங்களுமே நாடாளுமன்றத்துக்கு பார்வையாளர்கள் செல்வது தடுக்கப்பட்டதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது.

அதிகாரப்பரவலாக்கல்திட்டம் குறித்து புத்தபிக்குகள் தலைமையில் பெருகி வரும் எதிர்ப்பு அணிகள், நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தலாம்என்ற அச்சமே உண்மைக்காரணம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (உ-3)

# பதற்றத்துக்கு மத்தியில் நேற்று மன்னாரில் உண்ணாவிரதம்

யாழ். குடாநாட்டில் காணாமற் போனோர் குறித்த விபரங்களை வெளியிடுமாறு கோரி நேற்று மன்னாரில் ''புளொட்'' அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணாவிரதம் பெரும் பதற்றத்தின் மத்தியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பழைய பஸ்நிலையத்தில் இந்த உண்ணாவிரதத்தை நடத்த புளொட் அமைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை திடீரென அந்தப் பகுதியில் டாங்கிகள் சகிதம் வந்த இராணுவத்தினர் அந்த இடத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க அனுமதி மறுத்து, சனசந்தடியற்ற புதிய பஸ் நிலையப் பகுதிக்கு உண்ணாவிரத நிகழ்வை இடம் மாற்றுமாறு உத்தரவிட்டனர்.

அதையடுத்து புதிய பஸ் நிலையப் பகுதியில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணாவிரதத்தில் மக்கள் கலந்து கொள்வதைத் தடுக்கும் வகையில் நகருக்குள் மக்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்ததாகவும்— காவலரண்களில் பொதுமக்கள் தடுக்கப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

பிற்பகல் 2.30 மணியளவில் உண்ணாவிரதம் இடம்பெற்ற இடத்துக்கு அண்மையாக கிரனேட் ஒன்று வெடித்தது.

இச்சமயத்தில் மன்னார் ஆயர் அங்கு வந்து பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

நேற்று நகரில் பதற்றம் நிலவியது. (உ-164-3)

# பலாலி செல்லும் வாகனங்களுக்கு!

யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி விமான நிலையத்துக்குத் தனியார் வாகனங்கள் செல்வதற்குப் புதிய நடைமுறை ஒன்று இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

புதிய நடைமுறைப்படி, பலாலி விமான நிலையத்துக்குச் செல்லும் தனியார் வாகனங்கள் அதற்கென வழங்கப்பட்ட பாஸ்களுடன் யாழ். ரயில் நிலையத்துக்குக் காலை 8-30 மணிக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் தனியார் வாகனங்கள் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பாஸ் பெற்று நேரடியாகப் பலாலிக்குச் சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## அறந்தலாவை...

(முதலாம் பக்கத் தொடர்)

வும் —

இந்தத் தாக்குதலில் 16 பொலீஸார் கொல்லப்பட்டதாகவும் —

' புலிகளின் குரல் ' மேலும் தெரிவித்தது.

60 எம். எம். மோட்டார் உட்பட 38 துப்பாக்கிகளையும், 11 ஆயிரம் நடுத்தர ரவைகளையும் தாங்கள் கைப்பற்றியதாகவும் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்ட பின்னர் முதல் தடவையாக நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த குழுவின் உறுப்பினர்களான இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதியரசர் ரி. சுந்தரலிங்கம், சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்ன, அகமட் ஜாவீட் யூசுப் ஆகியோர் யாழ் செயலகத்துக்கு விஜயம் செய்து யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனுடன்கலந்துரையாடினார்கள்.

தமது ஆணைக்குழுவின் செயற்பாடு குறித்து ஏ. ரி. ஆரியரத்தின உதயனுக்கு தெரிவித்ததகவல் வருமாறு:–

எமது ஆணைக்குழு இதுவரை 9 பிராந்திய நிலையங்களை அமைத்துள்ளது. திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை ஆகிய இடங்களிலும் பிராந்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பிராந்திய நிலையம் அமைக்க இடம் தெரிவு செய்யவுள்ளோம்.

ஒரு மாத காலத்தில் அலுவலகம் செயல்படத் தொடங்கும். அத்துடன் எமது பணிகளும் ஆரம்பமாகும் — என்றார்.

இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் போது இங்கு பல தரப்பட்டவர்களையும் சந்தித்து கலந்துரையாடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## கனகராயன்...

(முதலாம் பக்கத் தொடர்)

குளம் சந்தியை நோக்கியும்—

கரப்புக்குத்திச் சந்தியை நோக்கியும் —

படை நகர்வுகள் இடம் பெற்ற போது படையினரை வழிமறித்து புலிகள் தாக்கியதாக ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

மேற்படி பகுதிகளில் படையினர் தரித்திருந்த இடங்கள் நோக்கி திங்கள் இரவு பெரும் தாக்குதல் ஒன்றைத் தாங்கள் மேற்கொண்டதாகவும் —

அப்பகுதியில் இருந்த இரு முகாம்களையும், விநியோக மையத்தையும், ஆயுதக் கிடங்கையும், வாகனங்களையும் ஆயுதங்களையும் தாங்கள் கைப்பற்றியதாகவும்—

'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது.

கனகராயன்குளம், புளியங்குளம், கருப்பட்டிமுறிப்பு ஆகிய இடங்களில் இருந்து முன்னேற முயலும் படையினருடன் தொடர்ந்து சண்டை இடம்பெறுவதாகவும் ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

நெடுங்கேணி — புளியங்குளம் வீதியில் உள்ள ஒலுமடுப் பாலத்தை — இராணுவம் அதன் வழியே நகரக் கூடும் என்ற அச்சம் காரணமாக — புலிகள் குண்டுவைத்துத் தகர்த்ததாக அறிய வந்தது.

ஒட்டுசுட்டான் பகுதியில் கடும் சண்டை நடைபெறுவதாக நேற்று முன்தினம் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்ட போதிலும் —

புலிகளின் தரப்புத் தகவல்களோ அல்லது வவுனியாவில் உள்ள சுயாதீன செய்தி நிறுவனங்களோ அதனை ஊர்ஜிதப்படுத்தவில்லை.

(உ-3-164-21)

## 3 ஹெலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வித்தார் என்றும் —

முல்லைத்தீவுக்கு வடகிழக்கே சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தில் ஹெலிக்கொப்டர்கள் கடலுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த போது புலிகள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தினர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஹெலிக்கொப்டர் ஓட்டிகள் தன்னியக்க ஏவுகணை எதிர்ப்பு வழி முறைகளைப் பயன்படுத்தி பாரிய அனர்த்தத்திலிருந்து ஹெலிக்கொப்டர்களைக் காப்பாற்றிக் கொண்டதாகவும் —

பின்னர் ஹெலிக்கொப்டர்கள் ஆனையிறவில் பாதுகாப்புடன் தரையிறக்கப்பட்டதாகவும் —

ஹெலிக்கொப்டர் ஓட்டிகள் கொடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து அந்தப்பகுதிக்குச் சென்ற புக்காரா விமானம் நடத்திய தாக்குதலில் புலிகளின் படகு ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாகவும்-

மற்றைய படகு தப்பித்துச் சென்றதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5)

# மரண அறிவித்தல்கள்

## பத்மநாதன் உஷாதேவி

ஆறுகால்மடம் புதுவீதியைச் சேர்ந்த திருமதி பத்மநாதன் உஷாதேவி 7-10-97 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிரபல புகையிலை வியாபாரி செல்லத்தம்பியின் அன்பு மகளும், ஆர். பத்மநாதவின் அன்பு மனைவியும், பத்மஉஷா, நிரோஜா ஆகியோரின் அன்புத்தாயரும் மகேந்திரராசா, பாஸ்கரன் (இத்தாலி), ரவீந்திரன், நாகேஸ்வரன் (சுவிஸ்), பிரபாகரன், கலாதேவி (ஜேர்மனி) சதாகரன் [சுவிஸ்) ஸ்ரீதரன், கெங்காதரன் (கனடா), ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (8-10-97) பகல் 12-00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. ரவீந்திரன்
(சகோதரன்]

(49810)

## திருமதி கந்தையா - செல்லம்மா

சுழிபுரம் பறாளாய் வீதியைச் சேர்ந்த திருமதி கந்தையா - செல்லம்மா அவர்கள் 07-10-97 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா [கட்டட ஒப்பந்தகாரர்] வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவச்செல்வம், வைத்திலிங்கம் [ஓவசியர்], அருட்செல்வம் [ஆஸ்திரேலியா]. திருச்செல்வம். முத்தையா [திருமண ஆலோசகர்], கணேசமூர்த்தி, சுந்தரமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி [கொழும்பு], சிவஞானமூர்த்தி [இத்தாலி], முத்தீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற நாகராசா, தாமோதரலிங்கம், [பொறியியலாளர் - ஆஸ்திரேலியா]. தர்மதாசன் [பிரதேச சபை - சுழிபுரம்], தெய்வராணி, சிவபாக்கியம், கமலாம்பிகை [ஆசிரியை], மங்கலேஸ்வரி, ஆகியோரின் மாமியாரும். தாமரைச்செல்வி, கலைச்செல்வி, சிவச்செல்வி, கதிர்காமலிங்கம் [ஆஸ்திரேலியா], அருள்நேசன் [கொழும்பு]. சிவச்செல்வன், காந்தசெல்வன், ஐங்கரச்செல்வன், விபிசா, விசாகன், யுவனேஸ்வரன், யதுகுலன், டாகினி. மோகனராம்ராதா, வரலட்சுமி, அனந்தசயன், கலாநிதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற நவரத்தினம் [சட்டத்தரணி], வைத்திலிங்கம், முத்துத்தம்பி, சுப்பையா, செல்லத்துரை [மலேசியா, சட்டத்தரணி], சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08-10-97) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.
பிள்ளைகள்
க. முத்தையா (மகன்)
(திருமண ஆலோசகர்)

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

(50373)

Beacon (வதிரி)
(பிரத்தியேக வகுப்பு)
Paper class
இரசாயனவியல்
திரு.க. ஜெயரூபன்
(B. Sc.)
ஆரம்பம்:
11 - 10 - 1997
சனி காலை 8-00 மணி
(50364)

உலக உள நல நாளை முன்னிட்டு
சாந்திகம் உளவளத்துணை நிலையமும்
யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவும்
இணைந்து நடத்தும்
உலக உள நல நாள்
இடம்: நாவலர் கலாசார மண்டபம்
நாள் : 10 - 10 - 1997
நேரம் : காலை 9-30 மணி
(புதிய நேரம்)
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★
A. H. C.
(சி/1715)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org